Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC.554/2023 DW-1**

Name : புருசோத்தமன்
Father / Husband name : ரங்கநாதன்
Village : சலவாதி
Age : 44
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 03.02.2026

Complainant present. Both side counsel present.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்ககப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை ( நேரம் 01.17 - 01.57 )**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். நான் தற்போது என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். இதற்கு முன்பு என்ன தொழில் செய்தேன் என்றால் 2013 ம் வருடத்தில் டைல்ஸ் கடை வைத்திருந்தேன். எங்கு கடை வைத்திருந்தேன் என்றால் திண்டிவனம் செஞ்சி ரோட்டில் வாடகை இடத்தில் கடை வைத்திருந்தேன். கடை எவ்வளவு விஸ்திரணம் என்றால் 10X10 அடி இருக்கும். டைல்ஸ் கடை வைப்பதற்கு முன்னால் என்ன வேலை செய்தேன் என்றால் விவசாயம். டைல்ஸ் கடை எதற்காக மூடினேன் என்றால் போதிய லாபம் கிடைக்கவில்லை, பார்க்க ஆள் இல்லை என்பதால் மூடினேன். டைல்ஸ் பொருட்கள் எங்கிருந்து வரும் என்றால் காஞ்சிபுரத்திலிருந்து வரும்.

2. புகார்தாரர் பாலாஜி எனக்கு பழக்கம் என்றால் இல்லை, நீதிமன்றம் வரும்வரை புகார்தாரரை நான் பார்த்தது இல்லை. எனது தொழில் ரீதியாக பாலாஜி எனக்கு பழக்கம் என்றால் சரியல்ல. எனது டைல்ஸ் தொழில் நஷ்டம் அடைந்ததால் கடையை மூடினேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும்

ம.சா.ஆ. 1 வழக்கின் காசோலையிலுள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான், கையொப்பம் மட்டும் என்னுடையது. 189100053305208 என்ற வங்கி கணக்கு எண் என்னுடையது, அதனை நான் பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். ம.சா.ஆ. 1 வழக்கின் காசோலை நான் கொடுத்தது தான் என்றால் சரிதான், புகார்தாரருக்கு நான் கொடுக்கவில்லை. நான் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். ம.சா.ஆ. 1 வழக்கின் காசோலையில் தொகை எண்ணாலும், எழுத்தாலும் ஆங்கிலத்தில் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான், யார் நிரப்பியது என்று தெரியாது. ம.சா.ஆ. 1 வழக்கின் காசோலை எண் 019366 என்றால் சரிதான். வழக்கின் காசோலை TMB வங்கியுடைது என்றால் சரிதான். TMB வங்கியில் தற்போதுவரை எனக்கு கணக்கு உள்ளது என்றால் சரிதான்.

3. ம.சா.ஆ. 1 வழக்கின் காசோலை தொடர்பாக பாலாஜி என்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். காசோலை போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாலாஜி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்கறிஞர் சொல்ல தெரிந்துகொண்டேன். வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் அனுப்பியுள்ளேனா என்றால் அனுப்பியுள்ளேன். பதில் அறிவிப்பில் என்ன விவரம் சொல்லியுள்ளேன் என்று தெரியுமா என்றால் தெரியும். பதில் அறிவிப்பில் என்ன சொல்லியுள்ளேன் என்றால் காசோலை எண் 019366, 019367 ஆகிய காசோலைகளை சீட்டு பணத்திற்காக டிஆர்எஸ் பிரபுவிடம் பாதுக்காப்பிற்காக கொடுத்துள்ளேன், பாலாஜி யார் என்று தெரியாது என்று சொல்லியுள்ளேன்.

4. எனது பதில் அறிவிப்பில் காசோலை எண் 019366, 019367 பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் தெரியாது. இந்த வழக்கிற்காக தற்போது பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காசோலைகள்

சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் கணக்கு வைத்துள்ள வங்கியில் காசோலைகள் சம்மந்தமாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது பதில் அறிவிப்பில் டிஆர்எஸ் பிரபுவிடம் பாதுக்காப்பிற்காக கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ. 1 ஆவணத்தில் சக்தி நகர், காலேஜ்ரோடு, சலவாதி மற்றும் எனது பெயர் மட்டும் உள்ளது, வேறு எந்த விவரமும் நிரப்பப்படவில்லை என்றால் சரிதான். எ.சா.ஆ. 1 ஆவணம் 2013 ல் ஏற்படுத்தப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். எ.சா.ஆ. 1 ஆவணத்தில் கையொப்பம் செய்த நபரின் பெயர் தெரியுமா என்றால் நினைவில்லை. எ.சா.ஆ. 1 ஆவணம் 2013 - 2014 வரை மட்டும் தேதிகள் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.சா.ஆ.1 ஆவணதில் டிஆர்எஸ் பிரபுவின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான், அவரின் மேலாளர் கையொப்பம் செய்தார்.

5. எ.சா.ஆ. 2 ரசீதுகளில் எனது பெயர் மட்டும் உள்ளது என்றால் மேலாளர் கையொப்பம் உள்ளது, அவரின் பெயர் நினைவில்லை. எ.சா.ஆ. 1 - 7 வரையிலான ஆவணங்களுக்கும் நான் பதில் அறிவிப்பில் சொல்லியுள்ள விவரங்களுக்கும், புகார்தாரருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எ.சா.ஆ. 2 ரசீதுகளில் எந்த தேதி, பெயர், விலாசம் எதுவும் இல்லை என்றால் சரிதான், அதன் முதல் பக்கத்தில் அனைத்து விவரங்களும் உள்ளது. எ.சா.ஆ. 3 காசோலையிலுள்ள கையொப்பம் நான் செய்தது தான் என்றால் சரிதான். மேற்படி காசோலைக்கான வழக்கு தனியாக நடைபெறுகிறது என்றால் சரிதான். எ.சா.ஆ. 3 காசோலையிலுள்ள வங்கி கணக்கு எண் என்னுடையது தான் என்றால் சரிதான். எ.சா.ஆ. 3 காசோலை நான் கொடுத்தது என்றால் சரிதான், டிஆர்எஸ் பிரபுவிடம் கொடுத்தேன். டிஆர்எஸ் பிரபுவின் காசோலைக்கும் புகார்தாரர் காசோலைக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல, இரண்டு காசோலைகளும் டிஆர்எஸ் பிரபுவிடம் கொடுத்தேன்.

6. எ.சா.ஆ.5 அறிவிப்பிற்கு நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் காசோலை எண் 019366 க்கான விவரம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு புதியதாக பொய்விவரங்களை கொண்டு மேற்படி அறிவிப்பை அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. டிஆர்எஸ் பிரபுவின் காசோலையும், பாலாஜியின் காசோலையும் வெவ்வேறு தேதி என்றால் சரிதான், 1 மாத இடைவெளி உள்ளது. இரண்டு வழக்குகளும் வெவ்வேறு வழக்கு மூலம் என்றால் சரியல்ல. பாலாஜிக்கு காசோலை கொடுத்து மோசடி செய்துவிட்டு ஏமாற்றுவதற்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வியாபாரம் ரீதியாக பாலாஜியிடம் கடன் வாங்கினேன், அதற்கு எனது காசோலையை எழுதி நான் பாலாஜியிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 10.08.2023 அன்று காசோலையை தான் பாலாஜிக்கு எழுதிகொடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கின் காசோலையில் தொகையும் நான் எழுதினேன் என்றால் சரியல்ல. எனது வங்கிக்கணக்கில் போதிய பணமில்லாமல் புகார்தாரரை ஏமாற்ற வழக்கின் காசோலையை கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் காசோலை மோசடி செய்ததால் தண்டிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

7. எனது தொழிலில் கடன் வாங்குவதும், திருப்ப கொடுப்பதும் வழக்கம், கடனை வாங்கிக்கொண்டு திருப்ப செலுத்தாததால் நான் நஷ்டயீடு செலுத்தவேண்டும் என்றால் சரியல்ல. மனு அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. எ.சா.ஆ.1 - 5 சம்மந்தமான விவரங்கள் எதையும் இந்த வழக்கிற்கு முன்னிட்டு அனுப்பிய பதில் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது பதில் அறிவிப்பில் சண்முகி சிட்பன்ஸ் சம்மந்தமாக எந்த தேதியில் பணம் பெற்று எந்த தேதியில் பணம் செலுத்தினேன் என்று தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சண்முகி சிட்பன்ஸ் ஆவணங்கள் நான் தயார்

செய்து கொடுத்தது என்றால் சரியல்ல. எ.சா.ஆ.1 - 5 வரை ஆவணங்கள் நகல் என்பதால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல, அசல் தாக்கல் செய்துள்ளேன்.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.